ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

லௌகிகன்:— (வைதிகரைக்கண்டு) சாஸ்திரிகளவாள்! தங்களைக் கண்டு வெகுநாளாய்விட்டது புண்ணியவசத்தாலின்று தரிசனம்கிடைத்தது ஸந்தோஷம்.

வைதிகர்:— வாரும், வாரும், எப்பொழுதுவந்தீர்? எவ்விடம்போயிருந்தீர்? போயிருந்தவிடத்தில் என்னவிசேஷம்?

லௌகி:— எல்லாவிடங்களிலும் வைதிகர்கள் மண்டையைத்தான் உருட்டுகிறார்கள்.

வைதி— இவர்கள் மண்டையைஉருட்டும்படியாய் வைதிகர்கள் என்ன செய்தார்கள்?

லௌகி:— இன்னதென்று தங்களுக்குத்தெரியவில்லையா? பத்திரிகை பார்க்கும் வழக்கமே உங்களிடமில்லை, எவ்விதம் தெரியப்போகிறது, தீண்டாமையை யொழிக்கவேணுமென்றால் வைதிகர்கள் குறுக்கே விழுந்து தடுக்குகின்றார்கள், பாலிகாவிவாஹம்கூடாது, பிரௌடா விவாஹந்தான் செய்யவேண்டுமென்றால் அதற்குப்போட்டியாக சாஸ்திரமென்றும், சம்பிரதாயமென்றும், கக்ஷிபண்ணுகிறார்கள், மற்றவை எப்படிப்போனாலு மிவ்விரண்டிலும் வைதிகர்களைக்கண்டபடி பேசுகிறார்கள், காதுகொடுத்துக் கேட்க்கமுடியவில்லை.

வைதி:— சாஸ்திரமென்றும், சம்பிரதாயமென்றும், இல்லாததை வைதிகர்கள் சொல்லுகிறார்களா? சாஸ்திரத்திலுள்ள துவேஷத்தை வைதிகர்களிடம் காட்டினால் பிரயோஜன மென்ன?

லௌகி:— இனிமேல் உங்கள்சாஸ்திரம், சம்பிரதாயங்களை அவாள் கேழ்க்கப்போகிறதில்லை, துணிந்து காரியத்தை ஆரம்பித்துவிடப் போகிறார்கள்.

வைதி:—அப்படித்தடபுடலாய் ஆரம்பித்துவிட்டால் யமதர்மராஜா இவர்களை விடப்போகிறதில்லை, ஹிரண்யகசிபுவைவிட இவர்கள் அதிகமாகத்தவம்புரிந்து வரம்பெற்றவர்களில்லை, அவ்வளவுவரம் வாங்கிய அவன் பிராமணர்களை துவேஷித்தபோது அவனடைந்தபயன் இன்னதென்று நீங்கள் கேழ்வைப்படவில்லைபோலும், உங்களுக்கெல்லாம் புராணங்கேட்பதென்ற வழக்கமேகிடையாது, அதைக்கேட்டிருந்தால் பாபம்செய்வதில் மனம்துணியமாட்டாது, வைகுண்டலோகத்தில் துவாரபாலகர்களாயிருந்த ஜயன், விஜயன், என்றவர்கள் ஸநகாதிகளான பிராமணர்களிடம்செய்த குற்றத்தாலடைந்தகதி என்னவென்றுதெரியுமா? வேனசக்கிரவர்த்தி, கார்த்தவீர்யார்ஜுனன், கம்ஸன், முதலியவர்கள் சாஸ்திரத்தையும், ஸம்பிரதாயத்தையும்மீறித் தீது செய்யத்துணிந்தார்களே! அவர்கள்கதி காதில்ப்படவில்லைபோலிருக்கிறது, எவரேனும், எதைச்செய்யினும், ஆராய்ந்துபார்த்து உசிதமானதைச்செய்து உத்தமமான பயனை அடைவார்களாக. சுபம்!

பத்திராதிபர்

ஆர்யதர்மம்.

சுக்ல-௵ வைகாசி-௴ ௧௭௨

# நரஸிம்மஜயந்தி.

நரஸிம்மஜயந்திமஹோத்ஸவம் ஆஸ்திகர் ஒவ்வொருவராலுமே முன்காலத்தில் கொண்டாடப்பட்டுவந்ததாம். அது வைசாகசுத்தசதுர்த்தசியன்று கொண்டாடப்படவேண்டும். பிரதிவருஷத்திலும் ஸ்ரீஜயந்தி, ஸ்ரீராமநவமி முதலிய மஹோத்ஸவம்போல் செய்யவேண்டியது. அந்த சதுர்தசியன்று ஸ்நானநித்ய கர்மங்களை அததற்குரியகாலத்தில் செய்து, உபவாஸநியமத்தோடிருந்து ஸாயங்காலத்தில் ஸ்நானம்செய்து கல்பத்திற்கூறியவாறு ஸ்ரீநரஸிம்மமூர்த்திக்குப் பூஜை, நைவேத்தியம் முதலியவைகளைச் செய்து சக்திக்கேற்றபடி விநியோகமும்செய்து இஹபரசிரேயஸ்ஸையடையவேணுமென்று ஸ்மிருதிகளில் கூறப்படுகின்றது. சிஷ்டர்களுமப்படியே அநுஷ்டித்தும்வருகிறார்கள். இந்த நரஸிம்மாவதாரவைபவம் ஸ்ரீபாகவதத்தில் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றது. அதன் ஸங்கிரஹமாவது.—

ஒருகாலத்தில் பிர்ம்மபுத்திரர்களான ஸநகாதிகள் அநேக லோகாந்தரங்களில் ஸஞ்சரித்துவருகையில் வைகுண்டத்தையும் அடைந்தார்கள். ஐந்தாறு வயதுள்ள குழந்தைகள்போல் திகம்பரர் (வஸ்திரமில்லாதவர்) களாய் பகவானது ஸேவைக்காக உள்ளே போவதைக்கண்டு ஸாமான்யசிசுக்களென்றெண்ணி அங்கு துவாரபாலர்களாயிருந்த ஜய, விஜயர்கள் தடுத்துவிட்டார்கள். அதனால் கோபங்கொண்ட அம்முனிவர்கள் 'ரஜோகுண தமோகுண விகாரமற்றதான இந்தவிடத்திற்கூட பேதபுத்தியைப் பாராட்டும் நீங்கள் இங்கிருப்பதற்கு அர்ஹதையற்றவர்கள். அதனால் அஸுரயோனியிற்பிறந்து பகவானுக்கு துவேஷியாக ஆகக்கடவீர்கள்' என்று சாபங்கொடுத்தார்கள். இந்த சாபத்தால் கீழேவிழும் அவர்களைப்பார்த்து மூன்றுஜன்மம் பகவானுக்கு விரோதியாயிருந்து மீண்டும் இவ்விடம் வருவீர்களென்று கருணை

கூர்ந்து கூறினார்கள். அவர்கள்தான் அஸுரஸந்தியாவேளையில் திதிதேவியினிடத்தில் காச்யபரிடமிருந்து முதலாவதுஜன்மமெடுத்தார்கள். அவர்களுக்கு ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு என்று பெயர். ஹிரண்யகசிபு இவர்களில் ஜ்யேஷ்டன், ஹிரண்யாக்ஷன் கனிஷ்டன், அவனை ஸ்ரீபகவான் வாராஹாவதாரமெடுத்து ஜலத்தில் மூழுகிக்கிடந்த பூமியை தனது தித்திப்பல்லால் மேல்கிளப்பி வருகையில் இடையூராய் நின்றதனால் நாசம்செய்துவிட்டார். இவ்வாறு தன் ஸஹோதரனான ஹிரண்யாக்ஷன் வாராஹமூர்த்தியான பகவானால் கொல்லப்படவே ஹிரண்யகசிபு சோகத்தால் பரிதபித்தான். கோபங்கொண்டு, கண்சிவக்க, உதடுதுடிக்க, புருவம் நெரிய சூலாயுதத்தைச் சுயட்டிக்கொண்டு தனது பரிவாரங்களான அஸுரர்களைப் பார்த்து "ஏ அஸுரர்களே! கேளுங்கள் இனி நொடிப்பொழுதும் தாமதிக்கக்கூடாது, சீக்கிரப்படுத்த வேண்டும், எனது பிரியஸகோதரன் அற்பர்களான சத்ருக்களால் கொல்லப்பட்டானென்பது தங்களுக்குத் தெரிந்தவிஷயமே. அதனால் வேகமாய் ஓடி மரியாதையை மீறிநடந்த அவனைப்பிடித்து சூலத்தால் சிரஸ்ஸை அறுத்துப் பெருகும் ரத்தத்தால் எனது ஸகோதரனை திருப்திசெய்துவைக்கவேண்டும். அந்த பிரதான சத்ருவைக் கொன்றுவிட்டால் வேர் அறுந்த விருக்ஷம்போல் வானவர் வாடிநிற்பார். அதற்காக இப்பொழுதே நீங்களெல்லோரும் பூமியில் பிராமணர் க்ஷத்திரியர் பெருத்த இடம் செல்ல வேண்டும். ஆங்கு தபஸ், யக்ஞம், வேதம், விரதம் இவைகளை ஆதரித்துவரும் வைதிகப்பிராமணர்களை ஹிம்ஸிக்கவேண்டும் விஷ்ணு பிராமணர்களைப் பிரதானமாகக் கொண்டவர், அதனால் பிராமணர்கள், கோக்கள், வேதம், வர்ணாச்ரமதர்மம் காணப்படுமிடம்சென்று கத்தியால் குத்துங்கள், தீ வைத்துப் பொசுக்குங்கள், அப்போது விஷ்ணு வெளிப்படுவார். அவரை ஸம்ஹரித்து நமது இஷ்டத்தையடையலாம்" என்று ஆக்ஞாபித்தான். இவ்வாறு தங்கள் யஜமானிட்ட கட்டளையை சிரமேற்றாங்கி ஆயுதபாணிகளாய் பட்டணம்கிராமம் தபோவனம் க்ஷேத்ரம்முதலிய இடம்சென்று சிலர் தீ வைத்தார்கள். சிலர் பிராகாரகோபுரங்களை இடித்தார்கள். அநேகவிதமாகப் பிராணிகளை அதிலும் பிராமணர்களை விசேஷமாகப் பீடித்தார்கள். இவ்விதம் பிராமணர்கள் ஹிம்ஸைப்பட்டுஓடவே வர்ணாச்ரமதர்மம் நடைபெறமற்போனது

பற்றி தேவர்களுக்கு ஹவிர்பாகம் கிடைக்காமலிருக்கவே ஸ்வஸ்தானத்தில் இருக்கத்தாளாமல் அதைவிட்டு பூமியில் மறைந்திருந்தார்கள். ஹிரண்யகசிபுவும் பிரேதனை ப்ராதாவுக்குமேல் நடத்தவேண்டிய சடங்குகளை நடத்தி அவனது புத்திரர்களான சகுனி, சம்பான் முதலியவர்களையும் அவர்களுக்குத் தாயான ருஷாபானுவையும், தனது தாயாரான திதிதேவியையும், இனிமையான சொற்களால் ஸமாதானப்படுத்தி தான் ஏகாதிபத்யம் பெறவேண்டி மந்தரத்ரோணியில் ஒற்றைக்காலால் நின்று உயரக் கைதூக்கி கடோரமான தவம்புரிந்தான். அவனது சிரஸ்ஸிலிருந்து வெளிப்பட்ட தபோக்னியானது மேலும் கீழும் நாலா பக்கங்களிலுமுள்ள லோகத்தாரைத் தபிக்கும்படி செய்தது. நதிகளும், ஸமுத்திரங்களும் கலங்கின; அனேக மலைகளுடனும், த்வீபங்களுடனும்கூடின பூமி அசைந்தது. நக்ஷத்திரங்களும், கிரஹங்களும் விழுந்தன. பத்து திக்குகளும் தீப்பற்றி எரிந்தன. இதனால் தேவர்கள் நடுங்கி ஸ்வர்க்கத்தைவிட்டு பிரம்மலோகஞ் சென்று 'ஓ ஸ்வாமி! ஹிரண்யகசிபுவினுடைய தபோக்னியால் இருக்கமுடியவில்லை.

அவற்கேதாவது உபாயம்செய்து, உலகங்கள் நசிக்குமுன் சாந்தமாக்கவேணும், அவனிம்மட்டோடுதவத்தை நிறுத்தப் போவதில்லை, தங்களுக்குத்தெரியாததொன்றில்லை. ஆயினும் தெரிவித்துக்கொள்ளுகிறோம், இந்தஜகத்தில் ஏகாதிபத்யம்பெற்று அடியோடு மாற்றிவிடுவதாக எண்ணத்துடன் கோரமான தவம்புரிகிறான், ஆகையால் இத்தஸமயத்தில் எது உசிதமோ அதைச்செய்ய வேண்டுகிறோம்." என்றுபிரம்மதேவரிடம் விக்ஞாபிக்க பிரம்மதேவரும் தக்ஷர்முதலியவர்களுடன் ஹிரண்யகசிபுவினது ஆச்ரமம்சென்று கோரமான அவனதுதபஸ்ஸைநோக்கி "ஏ அஸுரச்ரேஷ்டா! தவத்தைவிட்டெழுந்திரு எழுந்திரு உனக்குக்ஷேமம் உண்டாகட்டும் உனதுதபஸ்பலித்துவிட்டது வரம்கொடுக்க நான் வந்துவிட்டேன் இஷ்டப்பட்டவரனை வேண்டிக்கொள் உனது தபஸ்ஸைப்பார்க்க வெகுஆச்சர்யமாக இருக்கிறது,முனிவர்களும் முன்காலத்தில் இவ்விதம் தபஸ்செய்துஇருக்கமாட்டார்கள் இனி செய்யப்போவதுமில்லை ஜலத்தைக்கூட குடிக்காமல் நூற்றுக் கணக்கான வருஷங்களாக பிராணனை தரித்துக்கொண்டு இவ்விதம் எவரால்தபஸ்செய்யமுடியும், அதனால் உனக்குவேண்டிய

வரங்களையெல்லாம் தருகிறேன்." என்று பிரம்மதேவர்சொல்லி தனது கமண்டலுவிலுள்ள தீர்த்தத்தால் ப்ரோக்ஷிக்க ஸர்வாவயவங்களும் ஸம்பூர்ணமாக வஜ்ரம்போல்திருடமான உறுக்கிவிட்ட தங்கவடிவமான சரீரத்தோடெழுந்திருந்து ஆகாயத்தில் ஹம்ஸவாகனத்தின்மீது விளங்கும் பிரம்மதேவரைக்கண்டு ஸாஷ்டாங்கமாய் பூமியில்விழுந்து நமஸ்கரித்து எழுந்து சிரமேலிருகரம் கூப்பி பிரபுவைக் கண்ணாரக்கண்டு களித்து ஆனந்தபாஷ்பம் பெருக ஸ்தோத்திரம்செய்து "எனக்கு வரம்தருவீர்களானால் தங்களால் ஸிருஷ்டிக்கப்பட்ட பிராணிகளிடமிருந்து எனக்கு மரணம் நேரிடக்கூடாது உள்ளிலாவது வெளியிலாவது பகலிலாவது இரவிலாவது ஆயுதங்களாலாவதுமற்ற ஸாதனங்களாலாவது பூமியிலாவது ஆகாயத்திலாவது மனிதர்களாலாவது மிருகங்களாலாவது பிராணனில்லாத வஸ்துக்களாலாவது பிராணனுள்ள வஸ்துக்களாலாவது, தேவர்களாலாவது, அஸுரர்களாலாவது எனக்கு நாசம் நேரிடக்கூடாது, எனக்கு எதிரி ஒருவரும்நேரிடக்கூடாது நானொருவனே எல்லோருக்கும்மேலான ஏகாதிபத்தியம்பெற்றவனாயிருக்கவேண்டும்." என்று கேட்டுக்கொண்டான், பிரம்மதேவரும் "ஏ அஸுரச்ரேஷ்டா! இந்த வரங்களெல்லாம் கிடைக்கத்தகாதவைகள் ஆயினும்உனது தபஸ்ஸினால்ஸந்தோஷப்பட்டுத் தருகிறேன்." என்று வேண்டியவரனைக்கொடுத்து மறைந்தார். ஹிரண்யகசிபுவும் வரம்பெற்று ஸகோதரன் மரித்ததைநினைத்து பகவானிடத்தில் த்வேஷம்கொண்டான், ஸகலதிக்குகளிலும் ஸஞ்சாரம்செய்து ஸர்வலோகங்களையும் ஜெயித்து, தேவர் அஸுரர் மனிதர் முதலியவர்களையெல்லாம் ஜெயித்து தன்வசம்ஆக்கிக்கொண்டு அஷ்டதிக்பாலர்களது ஸ்தாபனங்களையெல்லாம் பிடுங்கி விச்வகர்மாவினால் ஸிருஷ்டிக்கப்பட்ட இந்திரனுடைய ஸ்தானத்தையும் ஆக்ரமித்துக்கொண்டு ஸர்வலோகாதிபதியாக சுகமாயிருந்தான். பிராம்மணாதிகளால் செய்யப்படும் யக்ஞாதிகள் தனக்கே திருப்தியைத்தருமாறு ஆக்ஞையிட்டான்.

"एवमैश्वर्यमत्तस्य दृप्तस्योच्छास्त्रवर्तिनः ।
कालो महान् व्यतीयाय ब्रह्मशापमुपेयुषः " ॥

இவ்வாறாக ஐசுவர்யத்தால் மதம்பிடித்து கர்வத்தையடைந்து சாஸ்திரமார்க்கத்தை மீறிநடந்து பிராம்மணசாபத்தால் துர்புத்தி

பிடித்த அந்த ஹிரண்யகசிபுவுக்கு இம்மாதிரியே வெகுகாலம் கடந்தது அவனது கொடுமையான தண்டனைக்கிபயந்துஇந்திராதிகளானஸகலரும் வேறுஇடத்தில் ரக்ஷைகிடைக்காமல் பகவானையேசரணமடைந்து ஸ்தோத்திரம்செய்து தங்களதுகஷ்ட தசையைத் தெரிவித்துக்கொள்ள அசரீரவாக்கொன்றுதோன்றி ஓ தேவர்களே பயப்படாதீர்கள் உங்களுக்கெல்லாம் க்ஷேமம்கிடைக்கும் இந்த அஸுர அரசனது கெட்டநடத்தையெல்லாம் எனக்குத்தெரியும் அதற்குப்பரிஹாரம்செய்கிறேன் கொஞ்சகாலம் எதிர்பார்த்திருங்கள் எவனானாலும் ஸரி தேவர்களிடத்தும் வேதங்களிடத்தும், கோக்களிடத்தும் பிராம்மணர்களிடத்தும் ஸாதுக்களிடத்தும் தர்மத்தினிடத்தும் என்னிடத்தும் த்வேஷம் வைத்தானேயானால் உடனே அவன் நசித்துவிடுவான் பிராம்மணத்வேஷம் வந்த இவன் நசிக்க வெகுகாலமாகாது எனதுபக்த சிரோமணியான மகானுபாவன் பிரஹ்லாதனுக்கு பலமாகத்ரோகம் எப்பொழுது செய்கிறானோ அந்தக்ஷணமே எவ்வளவுவரம் வாங்கியிருந்தாலும் நாசம்செய்துவிடுகிறேன், என்று தெரிவித்தது. இதைக் கேட்டு தேவதைகள் அச்சமயத்தை எதிர்பார்த்திருந்தார்கள். இதனால் அன்னத்வேஷம் பிரம்மத்வேஷம் வந்தவர்களுக்கு ஆயுஸ்ஸுகுறைவு என்று ஏற்பட்டது. "இன்னும் வரும்."

ப—ர்.

---

# புராணவிமர்சம்.

## கெட்டவர்சேர்க்கை கெடுதலாம்.

## " संसर्गजा दोषगुणा भवन्ति "

என்ற நீதிமொழியால் குணதோஷங்கள் சேர்க்கையைஒத்ததாம் உலகிலுள்ளவஸ்து நல்லதும் கெட்டதும் ஆவது நாம் அதையுபயோகிக்கும் முறையைச்சார்ந்ததாகும், இதுபோலவே ஸதாசாரமும், துராசாரமும், நமதுதேக மனச்சக்தி, இவைகளைப்பொருத்ததாகிறது. தேக மனச்சக்திகளை சரியானவழியாகச்செலுத்தினாலது ஸதாசாரமும் அதற்குவித்தியாஸவழியில் செலுத்தினால்துராசாரமுமாகும். உதாரணமாக:— விளக்கெரிந்துகொண்டிருந்தால்

அநேகவேலைகள் செய்துமுடிக்க ஸகாயமாயிருக்கிறது, இது விளக்கை உபயோகிக்குமோர்மார்க்கம், விளக்கின்ஜ்வாலையின் மேல் ஓர் விரலைவைத்துக்கொண்டிருந்தால் அது அணைந்துவிடும் இவ்விதமும்விளக்கை உபயோகிக்கலாம் இதனால்நாம்உபயோகித்து வருவதிலேயிருந்து நல்லது கெட்டதென்றறியவேண்டும். நன்மையினின்றும் தவறாதே என்பது உபநிஷதவாக்கியத்தின் சுருக்கமான அர்த்தமாகும், மனிதனுக்கு நன்மைகிடைப்பது எவ்விதமென்றால் அவனது சேர்க்கையிலும், முயர்ச்சியிலுமிருக்கிறது இவ்விரண்டும் பிரதானமேயாகிலும் இதில் சேர்க்கையே மிகவும் முக்கியம் சேர்க்கைக்குத்தக்க முயர்ச்சியே ஏற்படுவதுஇயல்பாம் சேர்க்கையின்றிமுயற்ச்சியுண்டாவதில்லை முயர்ச்சி நல்லதாக இருக்கவேண்டுமானால் ஸத்ஸங்கம்செய்துவரவேண்டும் ஸாதுவின் சேர்க்கையால் மேன்மைபெற்றவர்களும் துஷ்டர்களின் சேர்க்கையால் கெடுதலடைந்தவர்களும் மிகவுளர். ஸநாதனதர்மத்திலுதித்து அதைத்தழுவுவதாகத்தனக்குள் அபிமானித்துநடப்பவர்களான மதாபிமானிகளுள் சிலர் நமதுரிஷிகளின் முன்னுசாரவொழுக்கங்களில் சிலவற்றை மாற்றவேண்டியதவசியமெனக் கருதி, துராசாரத்திற்கு ஸதாசாரத்தில் சிறிதுபிரவேசிக்க இடமளிக்கிறார்கள், இதன்நிமித்தமாக ஸதாசாரத்திர்க்கு பல இடையூர்கள்நேருகின்றன.

இவர்களுக்கு ஸதாசாரத்தாலும், துராசாரத்தாலும் மனம் சென்று தடுமாறுவதற்கும் தக்கசமயத்தால் துராசாரத்தைத் தடுத்து ஸதாசாரத்தை நிலைநிறுத்த சக்தி பெறாததற்கும் துராசார சேர்க்கையே முக்கிய காரணம். துராசாரத்தை வெல்லவேண்டுமானால் ஸதாசாரத்தை நன்கறிந்திருக்கவேண்டும். அஃதில்லாவிடினும் பெரியோர்களின் உபதேசவாக்கியத்தால் ஓர் மூடநம்பிக்கைமட்டிலுமிருந்துவிட்டாலும் போதும். தற்காலத்தின் நிலைமையானது மிகபயங்கரமாகவே இருக்கிறது. வெகுவாக ஜனங்கள் ரிஷிவாக்கியங்களில் நம்பிக்கையற்று இதை விடமுடியாமலும் புதிய முறையை பூர்ணமாக கிரகிக்கமுடியாமலும், ஒவ்வொரு ஸமயமும் பற்பல மத ஸந்தேகம் தோன்றும்படியான ஆசாரத்துடனும்ஸதாசாரத்தையறியாக்குற்றத்தாலும் துர்வாதம்

புரிந்து, மனச்சாந்தியற்று விழிக்கிறார்கள். இதற்கெல்லாம் துராசாரசேர்க்கையே காரணம்.

உதாஹரணம்:- வனவாஸியான ஓர் ரிஷியிடம் இரண்டு கிளிக் குஞ்சுகள் அகப்பட்டு வளர்ந்து வந்தன. ஒரு காலத்தில் அக் குஞ்சுகளை பிராம்மணனொருவனும் வேடனொருவனும் யாசித்து வாங்கினார்கள். அவர்களதை மிக அன்பாக வளர்த்துவரவே, ஒரு நாள் இந்த ரிஷி வனமார்க்கமாய் ஸஞ்சரித்து வரும்போது, இருள் மூடிக்கொள்ளவே திக்கற்று ஓர் குடிசையைக் கண்டு அங்கு சென்றார். அவ்விடத்தில் கூட்டில் தொங்கிக்கொண்டிருந்த கிளியொன்று, "திருடன், எடு பாணம்" என்றது. அந்தக் கிளியைக்கண்டதும் அதன் கழுத்தில் கட்டியிருக்கும் மணியைக் கண்டு நாம் வளர்த்து வந்ததென்றறிந்து, இவ்விடத்தில் அபாய முண்டென்று ஊகித்து, ஓடத்தொடங்கினர். வேடனும் பாணத்துடன் பின்தொடர்ந்தான். ரிஷி ஓடோடியும் சென்று ஓர் ஆச்ரமத்தை தெய்வகதியாயடைந்தார். வேடனும் மறைந்தான். அந்த ஆச்ரமத்தின் வாயிலில் கூட்டில் தொங்கிக்கொண்டிருந்த கிளியொன்று இவரைக் கண்டதும் "அதிதி, ஆஸனம்" என்றது. ரிஷி இதைக்கண்டு இதுவும் நாம் வளர்த்துவந்த கிளியில் ஒன்றென்று அடையாளங்களாலறிந்து நிற்க, ஆச்ரமவாஸியான ரிஷி ஆஸனம்முதலிய ஸாமான்களுடனும் வந்து இவரைஉபசரித்தார். வந்த ரிஷி ஸ்வாமி எனக்கு மார்க்கமத்தியில் தோன்றிய ஓர் ஸந்தேகமிருக்கிறது. அதாவது நான் இரண்டு கிளிகளை வளர்த்து வந்தேன். அந்தக் கிளியிலொன்றை ஓர் வேடன் குடிசையில் கண்டேன். அது என்னைக்கண்டு "திருடன் எடு பாணம்" என்றது. இவ்விடம் வந்தபோது மற்றொரு கிளி "அதிதி, ஆஸனம்" என்றது. ஒரு தாயின் சிசுக்களான கிளிகளுக்கு இவ்விதம் வித்தியாஸமொழிகள் ஏற்பட்டகாரணம்யாது? என்றஸந்தேகத்தைத் தீர்க்கவேண்டுமென்றார். ரிஷியும் இவ்வித்தியாஸத்திற்கு சேர்க்கையே காரணம். அது வேடனின் குடிசை அதற்கு அவனுடன் பழக்கம். இக்கிளிக்கு என்னுடன் பழக்கம் ஆகையால் பழக்கமே பலிதமாகும்என்பது இயற்கையாகவுள்ளபடியால் இவ்விதம் வித்தியாஸமடைந்தது என்றார்.

(2) இந்திரப்பதவியைக் கருதித் தவம்புரிந்த ரிஷியினிடம் இந்திரன் ஓர் கத்தியைக் கொடுத்துச்சென்றான். அதன் காரண

மாக ரிஷிக்கு தவ வலிமை குறைவுபட்டு பிராணி ஹிம்ஸைக்கு புத்தி சென்றுவிட்டது. தவத்தையும் விட்டார். ஆகையால் வனவாஸியான நமக்கு இந்த தினுசும், பாணமும், பாபத்தைக் கொடுக்கும். இது கெட்டவஸ்துவின் சேர்க்கை கூடாதென்று" ஸ்ரீராமனுக்கு சிதை எடுத்துரைத்தாள் என்று ராமாயணமும்,

(3) "பரமேசுவரனின் அம்சபுருஷனாகிய துர்வாஸர் என்ற மகாமுனிவரும் ஒருதடவை கெட்டவனாகிய துரியோதனனின் ஆகாரமருந்தியதின் காரணமாக துவைதவனத்தில் பாண்டவர்களிடம் 10000 சிடர்களுடன் பிட்சையை யாசித்து மகிமையை யிழந்தார்" என்றும்.

(4) "காளமுனி என்பவரும் துர்யோதனனின் சேர்க்கையால் பாண்டவர்களுக்கு அபிசாரம்செய்து அதனால் தானேகெட்டார்" என்றும் மகாபாரதமும் விளக்கிக்காட்டுகிறது.

(5) 'பாகவதோத்தமனான துருவவம்சத்தில் அங்கனென்ற ராஜனொருவன் புத்திரஸந்தானத்தைக்கருதி வேள்வியொன்று செய்தான். அதன் பயனாகவே 'வேனன்' என்ற புத்திரனை யடைந்தான்.

स बाल एव पुरुषो मातामह मनुव्रतः ।
अधर्मांशोद्भवं मृत्युं तेनाभवदधार्मिकः ॥

அந்தக்குமாரன் சிறுவனாகயிருக்கும்போது அதர்மத்தின் அம்சத்தால் உண்டானவனும், தனக்கு தாயும் தாப்பனுமாகிய ம்ருத்யுவையனுசரித்திருந்தான். அதனாலவன் அதார்மிகனாகவிருந்தான். இவன் வில்லுடன் வனம்செனறு தான் மிருகங்களைக்கொன்று பிராணிகளுக்கு யமனாய், சேர்க்கையால் துஷ்டனென்று பெயர் பெற்று விளங்கிவரவே, இவனது ஹிம்ஸையைப் பொருக்காதரிஷிகள் இவனைச் சபித்துக்கொன்றார்களென்று பாகவதம் கூறுகிறது.

மஹான்களே! நமது இதிஹாஸபுராணாதிகள் இவ்விதம் உபதேசித்து வருவதிலிருந்து நமது மானிடப்பிறவிக் சடைத்தேற இதிஹாஸ புராணங்களைத் தவிர வேறு ஸதாசாரக்ரந்தம உண்டென்று சொல்ல யார் முன் வருவார்கள். இதிலிருந்து கெட்டவர்களின் சேர்க்கையானது சிறிதுகாலமேற்பட்டாலும்,

அது மஹான்களையும் மானமழித்து மாணபயத்தையும் கொடுக்கும் என்பது நிச்சயமாய் வெளிப்படுவதால் கெட்டசேர்க்கைக்கு எவ்வளவு வலிமை இருக்கிறதென்று வாசகர்களே ஊஹித்துக் கொள்ளுங்கள். நமது துராசாராதிகளுக்கு கெட்டவர்களின் சேர்க்கையே முக்கிய காரணமானதால் அதை விலக்கி ஈசாஞ்ஞையை அறிந்து நடந்துவர ஸந்மதியையளித்து பகவான் அருள் புரிவாராக. சுபம்!

K. S. சங்கரராமசாஸ்திரிகள்,
கொட்டாரக்கரை.

## முன்னோர்களின் மார்க்கமே முக்கியம்.

### (புராணவிமரிசம்.)

புராணங்கள் கட்டுக்கதைகளல்ல. புராணங்களே இந்துமத விருக்ஷத்திற்கு ஆணிவேர். இச்சக்தியாலேயே இது நாள்வரை இந்துமதம் பிரகாசித்துநிற்கிறது

இதுவே மனிதசுகபோகத்திற்குமுக்கியஸாதனமாம். புராணமென்பது யாதென்றால் நமது ரிஷிகள் உக்கிரதவத்தால் ஈசனைத் தரிசித்து அவரது ஆக்ஞை இன்னதென நன்கறிந்து அவ்வழியாகச்சென்று, மஹிமைபெற்று விளங்கினார்கள். அதையே நமது க்ஷேமலாபத்தின்பொருட்டு தந்தை தனயனுக்கு நிதிசேமித்து வைப்பதுபோல அவர்களது வம்சத்திலுதித்த நம்போலுள்ளவர்கள் சுகமடையக்கருதி அவர்கள் ஸன்மார்க்கமாகச் சென்று அடைந்த க்ஷேமலாபத்தையும் அவ்வழியிலுள்ள குணங்களையும் அதற்கன்னியமான மார்க்கத்திலுள்ள தோஷங்களையும் நன்கு விளக்கி எழுதிவைத்த அனுபவசாரஸாகரமே புராணமாம் என்பது ஸனாதன இந்துக்களின் உண்மையான கருத்து.

ரிஷிகளைப்போல மேன்மையாக விளங்கவேண்டுமென்ற எண்ணம் நம்மில் ஒவ்வொருவருக்கும் அவசியமுள்ளதானாலும் அவர்கள் எவ்வழி நடந்து மேன்மையாக விளங்கினார்கள் என்று கண்டு அவ்வழியாகச் சிரத்தையுடன் செல்வதுமாத்திரம் நம்மிடமில்லை.

ரோகி ஒருவனுக்கு ரோகம் நீங்கி சுகம்பெற மிக ஆவல் தான், ஆனால் ஔடதமும் பத்தியமும் மாத்திரம் அவன் மனதிற்குப் பிடிப்பதில்லை என்பதுபோலவேயாம். ஓர் காரியத்தில் பிரவேசிக்குமுன் அதன் குணதோஷங்களை சிந்தித்துப்பார்க்கவேண்டியதும் அதை நமக்குமுன் அனுஷ்டித்தவர்கள் யாரென்று தெரிந்து அவர்களைக் கேட்பதும் அறிஞர்களின் செய்கையாம், நமது முன்னோர்களின் அத்தியத்புதச்செயல்களைச் சிறிதுமறியச் சக்தியற்ற நாம் அவர்கள் நாகரீகமில்லாதவர்களென்று மதித்து தனதிஷ்டப்படி வேண்டியதை கிரகித்து சிலவற்றைத்தள்ளி தர்மானுஷ்டான தத்பரர்கள்போலவே நடித்துவருகிறோம். இதனால் உண்மையான பலன் பெறுவதில்லை. உண்மையாய் உள்ளபடி சிரத்தைவைத்து அனுஷ்டிக்காத குற்றமே இதற்குக் காரணமாம்.

எவ்வளவு ஸாமர்த்தியசக்தியுள்ளவனும் மஹான்களின் வாக்கியத்தை தழுவாமல் உலகசுகம் பெறமுடியாதென்று அடியில் விளக்கப்புகும் தத்துவஸாரத்தால் நன்கறியலாம். மஹான்களின் வாக்கியத்திற்கு ஓர் தெய்வசக்தியுண்டு என்பது நமது நம்பிக்கை. அவர்களை நம்பாமல் சுகம்பெற்றவர்களில்லை என்பது நிச்சயம்.

நமது புத்தியைச் சற்று நேர்மார்க்கமாகச் செலுத்தி புராணாதிகளைக் கவனித்துப்பார்த்தால் அதன் உண்மை விளங்கும். உலகில் பல ஜாதிகளிலும் எவ்வளவோ மஹான்கள் தோன்றி கணக்கற்ற சரித்திரங்கள் எழுதிவைத்திருப்பது நாம் அறிந்த விஷயமே. வெகுகாலத்திற்குமுன் வியாஸரால் எழுதிவைக்கப்பட்ட புராணாதி சரித்திரங்கள்; இன்னும் நாடகம், ஸினிமா, முதலிய கண்காக்ஷி சாலைகளிலும் பிரகாசமாக விளங்கி வருவதால், புராணாதிகளுக்கு திவ்யசக்தியுள்ளதாகச்சொல்ல என்ன ஸந்தேஹம். புராணத்தால் புகழ்பெற்ற ராஜசரித்திரம் யாதெனில் முன்னொருக்கால் பூமிக்கு அரசனில்லாமல் வரவே அப்போது நமது ரிஷிகள் மரணமடைந்த "வேனன்" என்ற ராஜனின் இருகரங்களைக் கடைந்து "பிருது" என்ற ஈசுவராம்சமான மஹாபுருஷனை ராஜனாக அடைந்தார்கள். அக்காலத்தில் பூமி பயிரற்று விளங்கவே அதன் காரணமாக ஸகலப்பிராணிகளும் உண்ண உணவின்றி தவித்து, பிருது ராஜனிடம் தங்கள் கஷ்டத்தை அறிவித்தார்கள்.

அப்போது பிருதுராஜன் இது பூமியின் குற்றமென்றெண்ணி அவளை சிக்ஷிக்கக் கருதி திவ்விய தனுர்பாணங்களுடனிரதமேறிப் புறப்பட்டான். அதையறிந்த பூமி "கோ" ரூபம் தரித்து ஓடவே அவளைப்பின்தொடர்ந்து ராஜனும்போக பத்து திசைகளிலும் பற் பலவிடங்களிலும் சுற்றித்திரிந்து கதியற்றுக் கடைசியாக ராஜனையே சரணமடைந்து பலவிதமாக ஸ்தோத்திரம் செய்தாள்.

அஃதைச் சிறிதும் கவனிக்காத "பிருதுராஜன்" நீ அகங்காரம்கொண்டவள், யாகத்தில் ஹவிர்பாகங்களை நன்கு புஜித்து விட்டு ஸஸ்ஸிய விருத்தியைச் செய்யாமலிருக்கிறாய். ஆனது பற்றி உன்னை வதை செய்யப்போகிறேன் என்றார்.

அப்போது பூமி,ஸ்வாமி! ஸதாசாரமுள்ள அரசர்கள் என்னிடமிருந்து ஸஸ்ஸிய ஸமிர்த்திகளையதேஷ்டமாகப் பெற்று என்னை ஆதரிக்காமல் துராசாரமுள்ளவர்களாக இருந்தார்கள். அப்போது நான் யாகாதிகளான ஸத்கர்மங்களுக்கு உபயோகமான எனது ஸஸ்ஸியஸமிருத்திகளை சேமித்து வைக்க எண்ணி அவைகளை நானே புஜித்துவிட்டேன். அதுவும் வெகுகாலமானபடியால் என்னிடம் ஜீர்ணமாய்விட்டது. ஆனதால் என்பேரில் குற்றமெதுவுமில்லை. ஒருவன் பசுவிடம் பாலைக்கறந்தெடுக்கக் கருதி தனுர்பாணத்துடன் அதன் பக்கம் சென்றால் பாலையடையமுடியுமா? ராஜனே! நீர் முன்னொருக்கால் வராகரூபம் தரித்து என்னைப் பாதளாத்திலிருந்து எடுத்து வந்து நிலைக்கச்செய்து இரக்ஷித்தீர்கள். வழி தப்பிச்சென்றால் எதையுமடைய முடியாது. ஆதலால் சுகம் பெறும்வழியைச் சற்றுக் கவனித்துக் கேளுமென்று பூமியானவள்,

(1) अस्मिन् लोकेऽथवामुष्मिन् मुनिभिस्तत्वदर्शिभिः ।
दृष्टायोगाः प्रयुक्ताश्च पुंसां श्रेयः प्रसिद्धये ॥

(2) तानातिष्ठति यस्सम्यगुपायान् पूर्वदर्शितान् ।
अपरःश्रद्धयोपेत उपेयान् विन्दतेञ्जसा ॥

(3) ताननादृत्ययोविद्वान् अर्थानारभते स्वयम् ।
तस्य व्यभिचरन्त्यर्थाः प्रारब्धाश्च पुनः पुनः ॥

1. தத்துவமறிந்த முனிவர்கள் மானிடர்களுக்கு நன்மை சித்திக்கும் பொருட்டு இவ்வுலகிலும் அல்லது அவ்வுலகிலும் கிருஷி அக்கினிஹோத்திரம் முதலிய உபாயங்களைக்கண்டும் அனுஷ்டித்துமிருக்கிறார்கள்.

2. கீழ்ப்பட்டவனாயினும் எவன் முன்னோர்களால் காட்டப்பட்ட அந்த உபாயங்களை சிரத்தையுடன் நன்றாய் அனுஷ்டிக்கிறானோ அவன் விரைவில் அடையவேண்டியபயன்களையடைகிறான்.

3 அறிவுள்ளவனாயினும் எவன் அந்த உபாயங்களை ஆதரவு செய்யாமல் தான் அர்த்தங்களைப்பற்றி யத்தனிக்கிறானோ அவனுடைய 'காரியங்கள் அடிக்கடி யத்தனிக்கப்பட்டாலும் சித்திபெருவதில்லையாகையால் உமது முன்னோர்களான ரிஷிகள் கையாண்டுவந்த மார்க்கம் இன்னும் பிரகாசமாக இருக்கிறது, அவ்வழியாகச் சென்று என்னிடம் ஸஸ்வியரூபமான க்ஷீரத்தைக் காந்து கொள்ளும் என்று முன்னோர்களின் மார்க்கத்தை உபதேசித்தாள்.

அதன்படியே அவரும் சென்று சுகம்பெற்று விளங்கினார் என்று பாகவதம் விளக்கிக்காட்டுவதிலிருந்து முன்னோர்களின் ஆசாரத்தைக் கைவிட யாராலும் முடியாதென்று புராணதத்துவத்தால் விளங்குவதால், புராணமே புகழ்பெறத்தக்க மார்க்கமென்று அறிந்தபிறகும் அதைக்கட்டுக்கதையென்று சொல்ல முடியுமா? பகவதம்சபூதான பிருது ராஜனுக்கே முன்னோர்களின் ஆசாரம் சுகமளிக்குமானால் மனிதப் புழுக்களான நம் போலுள்ளவர்களுக்கு அது எவ்வளவு உண்மையான சுகஸாதனமாகும் என்பது இப்புராணக்கதை மூலமாக நன்கு அறிவதால் புராணமே புகழ்பெறச்செய்யுமென்பதும் முன்னோர்களின் ஆசாரத்தைக் கைவிடக்கூடாதென்பதும் சித்தம். இச்சரித்திரத்தால் நாமும் அவ்வழியாகச்சென்று சுகம்பெற ஈசன் அருள்புரிவாராக

சுபம் !

கே. எஸ். சங்கரராமசாஸ்திரிகள்,
கொட்டாரக்கரை.

# ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷித சரிதம்.

(288-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆயினும் தாத்தாச்சாரியார் வஞ்சகமாய் தீக்ஷிதாளை வதஞ் செய்யத் துணிந்து, மூடனான ஸேனைத்தலைவனிடம் ராஜாவின் முத்திரைகொண்ட பத்திரிகையைத்தயாரித்துக்கொடுத்து இரவில் 200படர்களை உருவின கத்தியுடன் இருக்க எச்சரிக்கை செய்து "ராஜாஜ்ஞையிருப்பதால் அரண்மனைவாயிலில் நுழைவதற்குள்ளேயே தீக்ஷிதாளின் கண்டத்தைச் சேதித்து விடு" என்று கட்டளையிட்டார். தவிரவும் அரசன் அவஸரமாய் வந்துவிட்டுப் போகவேண்டும் என்று தெரிவித்ததாக ப்ரதிஹாரி மூலமாய் இரவு இரண்டாவது யாமத்தில் தீக்ஷிதாள் வரும்படி ஏற்பாடு செய்தார்.

அப்போது தீக்ஷிதாள் "அகாலத்தில் அரசன் நம்மை அழைப்பதற்குக் காரணம் யாது? ஒரு ஸமயம் விஷமிகளின் தந்திரச் செயலாயிருக்கலாமோ, அப்படியிருந்தாலும் கவலையில்லை. குலதெய்வமான மார்க்கஸஹாயர் நமக்குத் துணையாயிருக்கின்றார் என்று நிச்சயித்து சிஷ்யர்களையும் எதிர்பாராமலே கால்நடையாகவே அரண்மனை அஜாரவாயலில் வரவே நிர்மலமான அப்போர் வீரர்களின் கத்திகளின் காந்தியாலேயே இருள் நீங்கப்பெற்று சற்று வீரர்களை மந்தஹாஸத்தோடு பார்த்துவிட்டு அரண்மனையினுள்ளே பிரவேசித்தார். அப்போது ஸேனாபதியால் ஸங்கேதப்படுத்தப்பட்ட கொலையாளிகளும் அம்மஹானின் கடாக்ஷம் விழுந்ததும் பிரமித்து ஸ்தம்பித்து நின்றனர்.

அரசன் இந்தமாயாமார்க்கத்தை அறியாதவனானதால் "அகாலத்தில் மஹான் இங்கு வருவதற்குக் காரணம் என்னவோ புலப்படவில்லையே" என்று நினைத்து முன்புறம் வந்து வணங்கி "பகவானே! கிருஷ்ணபரமாத்மாவின் கிருஹத்தை நாடிசென்று குசேலஸ்வாமி அடைந்ததுபோல் தாங்கள் என்னை அநுக்கிரஹிக்கவந்தீர்களா? பல்லக்கு சிஷ்யாள் பரிவாரங்கள் இல்லாமல் வருவதற்கு என்ன காரணம்? ஒருஸமயம் நான் ஏதாவது சிவனடியாருக்குத் தவறி அபசாரஞ்செய்திருந்து அதனால் சினங்கொண்டு நிக்கிர

ஹிக்க வந்திருக்கின்றீர்களா” என்று வினவினன். அப்போது தீக்ஷிதாள் ராஜனே! உனது மங்களத்தை நாடுகிற எனக்கு உன்னிடத்தில் வருவதற்கு அகாலம் என்று தோன்றவில்லை அதனுல் எனக்கு தீங்கு நேரும் என்ற அச்சமுமில்லை. ஆனுல் இங்கு உனக்கடங்காத துஷ்டர்களின் செயலால் ஒரு ஆச்சர்யம் நிகழ்ந்திருக்கிறது. அதைக் காலையில் அறிவிக்கிறேன், உனது பந்துக்களை ஜாக்கிரதையாக வைத்துக்கொள் என்றுகூறி அரசனுல் அனுப்பப்பட்ட முக்கியவீரர்களையும்துணைக்குவேண்டாம்என்றுசொல்லி தம் இல்லஞ்சேர்ந்தனர். பாரதத்தில் பிரஜாகரபர்வாவில் ஸஞ்ஜயன் திரதராஷ்டாரிடம் காலை பாண்டவர்களின் செய்தியைச்சொல்கிறேன் என்றதும் எப்படி திரதராஷ்டார் விழித்துக்கொண்டிருந்தாரோ அதுபோல் சின்னபொம்மராஜனும் இரவு பூராவாகவும் நித்திரையில்லாமல் வழக்கம்போல் காலையில், சங்குஓசை முதலானவையில்லாமைகண்டு, வெளியில்தானே வந்துபார்த்தபோது அப்போர்வீரர்கள் யாவரும் உருவினகத்தியோடு சித்திரப்பதுமைபோல் நிற்பதைக்கண்டு, அச்சமும், ஆச்சர்யமுமடைந்தான். உடனே வேந்தன் விரைவாய் காலைக்கடன்களை முடித்து முன்னமேயே நித்தியகர்மாக்களை அநுஷ்டித்து அக்கினிஹோத்திரசாலையில் மற்றொரு அக்கினிபோல் பிரகாசிக்கும் தீக்ஷிதாளையடைந்து அக்காரணத்தை வணக்கமாய்க்கேட்டான், அப்போதுதீக்ஷிதாள் “மாயிகமான எனது உடலைமாய்க்க விஷமிகள்செய்த கபடச்செய்கை” இது எனக்கு மித்யாபூதமான காயத்தில் அபிமானமில்லாதிருந்தாலும் லோகோபகாரமாகச் செய்யவேண்டிய காரியங்கள் அவசிஷ்டங்களாயிருப்பதால் பகவானுடைய ஆஞ்ஞையை அநுஸரித்து அவர்களைத்தப்பிக்கச் செய்திருக்கிறேன். உனது ராஜகார்யங்களில் நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்; மந்திரிகளிடத்தில் பூர்ணமானநம்பிக்கைவைக்கலாகாது இக்காரியத்தைச்செய்ததற்காக அவர்களைதண்டிக்கவேண்டாம்; மன்னிப்புசெய்து, அச்சத்தைமட்டிலும் காண்பிக்கவேண்டும்; என்றுசொல்லி அரண்மனையிலுள்ள அவர்களை முன்போல் ஆகும்படி கடாக்ஷித்தார். அவர்கள் சரீரஸ்வாதீனத்தையடைந்து தீக்ஷிதாளின் சரணகமலங்களில் விழுந்து, எழுந்து, மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர்.

சின்னபொம்மன் தீக்ஷிதாளின் ஆஞ்ஞைப்படி அவர்களுக்கு எச்சரிக்கைசெய்து பயமுறுத்தி, மன்னித்தான். இது தாத்தாச்சாரியாரின் கபடத்தால் நிகழ்ந்தது என்று நன்குணர்ந்த ராஜன் தீக்ஷிதாளின் அபிப்பிராயத்திற்கிணங்கி இடையூறுசெய்யர்விட்டாலும் பிர்தானுதிகாரத்தைத்தானே நிர்வஹித்ததால் அதுவே தாத்தாச்சாரியாருக்கு சிக்ஷைவிதித்ததாக ஆயிற்று.

இச்சரிதம் ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதவிஜயத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டது. எனது கூடஸ்தர்களான-விருத்தர்கள் கர்ணபரம்பரையாய்க் கேட்டுவந்த விவரத்தை இளம்பிராயத்திலேயே எனக்குச்சொன்னது வேறுவிதமாயிருக்கிறது. அஃதாவது— நமது தீக்ஷிதாள் வேலூரிலிருந்து பல்லக்கிலேறி அடையப்பலத்திற்குப்போகும்போது இரவில் நடுக்காட்டில் தாத்தாச்சாரியாரால் அனுப்பப்பட்ட துஷ்டர்கள் பல்லக்குபோகிகளை நிறுத்து என்று பயப்படுத்தவே அவர்கள் பல்லக்கைக் கீழே இறக்கி காப்பாற்ற வேண்டுமென்று கூவினர். அப்போது முன்னே நிற்கும் துஷ்டர்களை அறிந்த தீக்ஷிதாள் தமது குலதெய்வமும் விரிஞ்சிபுரநாதனுமான மார்க்கஸஹாயரை மார்க்கஸஹாயாஷ்டகம் என்ற ஸ்தோத்திரத்தால் துதிக்கவே அகஸ்மாத்தாய் ஒரு அக்னிஜ்வாலை தோன்றி அவர்களை எரித்துவிட்டது. அந்த மார்க்கஸஹாயாஷ்டகத்தை சிவாநந்தயோகிகள் ஆத்மார்ப்பணத்தோடு சேர்த்து அச்சிட்டிருக்கின்றனர். இப்போதும் தீக்ஷிதாள் பரம்பரையிலுள்ளவர் ஆபத்து நேருங்காலங்களில் அந்த ஸ்துதியைச்சொல்லி இஷ்டஸித்தி பெறுகின்றனர்.

இந்த வரலாறே உசிதமென்று தோன்றுகிறது. ஏனெனில் அதிகாரம் பெற்றிருக்கிற கர்வமிருந்தாலும் வித்வான் என்று புகழ்பெற்ற ஒருவன் மற்ற வித்வானை நகரமத்தியிலேயே தைர்யமாய்க் கொலைசெய்யத் துணியமாட்டான். அவ்வளவு துணிச்சலிருந்தால் ராஜாச்ரயம் சிறிதுகூட இருக்கரோது.

(தொடரும்)

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.